# நாடி

Pulse of the Singapore Muslim Community

நாடி 20 ஹிஜ்ரி 1433 துல்காயிதா செப்டம்பர் 2012

இலவசம்

# வகஃப் இல்மு

## அறநிதிக்கு உதவுங்கள்




## நமது கல்வித்திறனை உயர்த்துங்கள்

# கல்வி மேம்பாட்டுக்கு புதிய வகஃப் அறநிதி

சிங்கப்பூர் முஸ்லிம் சமூகத்தின் மார்க்கக் கல்வி வசதிக்கு உதவும் முயற்சியில் வகஃப் அறநிதி தொடங்கப்பட்டுள்ளது. தகவல் தொடர்பு, கலைகள் மற்றும் முஸ்லிம் விவகார அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் 4.8.2012 அன்று வகஃப் இல்மு எனும் இந்த நிதியைத் தொடங்கி வைத்தார். இந்த நிதி முக்கியமாக இஸ்லாமியக் கல்வியைக் கற்பதற்கு உதவுவதாக இருக்கும் என்று அமைச்சரும், முயிஸ் அதிகாரிகளும் தெரிவித்தனர்.

வகஃப் இல்மு அறநிதிக்கு விருப்பமுள்ள யாரும் எவ்வளவு தொகை வேண்டுமானாலும் வழங்கலாம். வகஃப் உதவி வழங்க விரும்பும் முஸ்லிம்களுக்கு ஒரு புத்தாக்க வழியாக, நடைமுறையாக இது அமையும் என்று முயிஸ் தலைவர் அல்ஹாஜ் அலமி மூஸா கூறினார்.

இந்த நிதி குறித்து இவ்வாண்டு நாடாளுமன்ற வரவு செலவுத் திட்ட விவாதத்தின் போது அறிவிக்கப்பட்டது. முயிஸ், இஸ்லாமியக் கல்வித் திட்டங்களை மேற்கொள்வதற்கும், முழுநேர சமயப் பள்ளிகளை நடத்துவதற்கும் உதவுவதே வகஃப் இல்முவின் நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டது. மக்களின் அறநிதியான அதற்கு பொதுமக்கள் இயன்ற அளவுக்கு ரொக்க நன்கொடை வழங்கலாம். தெரிவு செய்யப்பட்ட பள்ளிவாசல்களில் தொகையை வழங்கலாம். அல்லது காசோலை, இணையத் தளம், ஜைரோ மூலமாகவும் வழங்கலாம்.

இஸ்லாமிய சமய மன்றம் (முயிஸ்) சமூக, பொருளியல், கல்வி மேம்பாடுகளுக்குக் கை கொடுக்கும் வகையில் வகஃப் சொத்துகளைப் பெருக்கும் முன்மாதிரியான திட்டங்களை பல ஆண்டுகளுக்கு முன்பே மேற்கொண்டதை அறிவோம். சிங்கப்பூரின் துரிதமான வளர்ச்சிக்கும் மாற்றங்களுக்கும் ஈடுகொடுக்கும் சவால் நமது சமூகத்திற்கு உண்டு. இதைக் கருத்தில் கொண்டு வகஃப் சொத்து வளர்ச்சிப் பணிகளை அது முடுக்கிவிட்டது. வகஃப் சொத்துகளுக்கு சந்தை நிலவரத்துக்கு ஏற்ப வருவாய் கிடைக்கும் என்பதால் எதிர்காலச் சமூக, பொருளியல், கல்வி மேம்பாட்டுப் பணிகளுக்கு தாராளமாகச் செலவிட முடியும் என்று முயிஸ் அப்போது நம்பிக்கை தெரிவித்தது.




## உதவி மனப்பான்மை

அமைச்சர் யாக்கூப் இப்ராஹிம் தமது நோன்புப் பெருநாள் செய்தியிலும் சமூக உதவி மனப்பான்மையைக் குறிப்பிட்டார். "ஒருவருக்கு ஒருவர் உதவுவதன் மூலம் நமது ஒட்டு மொத்த முஸ்லிம் சமூகமும் முன்னேற வேண்டும். குடும்பங்களே சமூகத்தின் தூண்கள். பொருளாதார பலத்தைவிட வலுவான குடும்பங்களே பிரச்சினைகளைச் சிறப்பாகச் சமாளிக்கக் கூடியவை. எனவே, சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவது குடும்பத்தில் தான் தொடங்குகிறது" என்று அவர் தெரிவித்தார்.

குடும்பத்தாருக்கு உதவுவது போல் நமது மக்கள் ஒருவருக்கு ஒருவர் உதவ வேண்டும். குறிப்பாக, இளையர்களுக்கும், வசதி குறைந்தவர்களுக்கும் உதவ வேண்டும். சிங்கப்பூர் முஸ்லிம்கள் ஒருங்கிணைந்த சமூகமாகவும், நாடாகவும் தொடர்ந்து முன்னேற வேண்டும் என்றும் அமைச்சர் வலியுறுத்தினார்.

கல்வி, இன நல்லிணக்கம், தேசிய சேவை போன்ற அம்சங்களில் அக்கறையுடன் செயல்படுவது அவசியம் என்று மலாய்-முஸ்லிம் அமைப்புகளின் பிரிதிநிதிகள் கலந்து கொண்ட தேசிய தினப் பேருரை தொடர்பான கலந்துரையாடல் கூட்டத்திலும் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் எடுத்துரைத்தார். கல்வி முதலான தேசிய அம்சங்களில் சமநிலை தேவை. அவை நடுநிலையாகவும், சீராகவும் இருக்க வேண்டும் என்றார் அவர்.

# ஜாஸா பக்தி விருது பெற்றார் முதுபெரும் தலைவர் ஹாஜி இபுறாஹிம் மரைக்கான்

1980களின் துவக்கம், சிங்கப்பூர் இந்தியர்களின் கல்வித் தேர்ச்சி சரிவு காணத் தொடங்கியது. இச்சரிவு தமிழ் முஸ்லிம்களுக்கும் பொருந்தியது. ஹாஜி இபுறாஹிம் மரைக்கான் இக்காலக் கட்டத்தில்தான் தமிழ் முஸ்லிம் ஜமாஅத்தின் தலைவராக இருந்தார். “தமிழ் முஸ்லிம்களின் கல்வித் தேர்ச்சியை உயர்த்த ஏதாவது செய்தாக வேண்டும்” என்று உறுதி எடுத்துக்கொண்டார்.

சில கல்வியாளர்களிடமும், ஆசிரியர்களிடமும் கலந்துபேசி கல்விக்குழு ஒன்றை ஏற்படுத்தினார்; தேர்ச்சி நிலையைத் தமிழ் முஸ்லிம்களின் கவனத்திற்குக் கொணர்ந்தார்; நிதி திரட்டி கல்வி ஊக்குவிப்புத் தொகைகளை மாணவர்களுக்கு வழங்கினார். இதுபோன்ற நடவடிக்கைகளினால் தேர்ச்சி நிலை படிப்படியாக உயர ஆரம்பித்தது.

மாணவர்களின் உயர்வுக்காக மட்டுமல்லாது, சிங்கப்பூர் இந்திய முஸ்லிம்களின் ஒற்றுமைக்கும், சமூக பொருளாதார நன்னிலைக்கும் ஹாஜி இபுறாஹிம் மரைக்கான் சிறந்த பணி ஆற்றியுள்ளார். பல்வேறு அடித்தள, சமூக அமைப்புகளில் ஈடுபட்டுப் புரிந்துணர்வும், நல்லெண்ணமும் ஓங்கப் பாடுபட்டுள்ளார்.

சிங்கப்பூர் இஸ்லாமிய சமய மன்றம் ஹாஜி இபுறாஹிம் மரைக்கானின் சேவையையும், உழைப்பையும் அங்கீகரிக்கும் வகையில் அன்னாருக்கு இவ்வாண்டு ஜாஸா பக்தி விருதை வழங்கிக் கௌரவித்தது.

விருதை, நமது சிங்கப்பூர் அதிபரிடமிருந்து பெற்றுக்கொண்ட ஹாஜி இபுறாஹிம் மரைக்கான் இஸ்லாமிய சமய மன்றத்திற்கு உளப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொண்டார். இவ்விருது தமது உழைப்பிற்குக் கிடைத்த அங்கீகாரம் என்று குறிப்பிட்ட அவர், இது மற்றவர்களுக்கும் ஒரு உந்துதலை அளிக்கும் என்று தெரிவித்தார்.

ஹாஜி இபுறாஹிம் மரைக்கான் தமிழ் முஸ்லிம் ஜமாஅத்தின் தலைமைப் பொறுப்பில் இருந்ததோடு, இஸ்லாமிய சமய மன்றத்தின் செயலவையில் மூன்று தவணைகள் பணியாற்றியுள்ளார். இஸ்லாமிய சமய மன்ற நிர்வாகக் குழுவில் பணியாற்றிய போது வக்ஃப் குழு, முதியோர் நலக்குழு, சட்டப்புணர் அமைப்புக்குழு ஆகிய துணைக்குழுக்களில் பணியாற்றி பாராட்டுதல்களைப் பெற்றுள்ளார்.



தற்சமயம் தென்னிந்திய உலமாக்கள் சபையின் செயலாளராகவும், இந்திய முஸ்லிம் பேரவையின் உதவித்தலைவராகவும் பணியாற்றிவரும் ஹாஜி இபுறாஹிம் மரைக்கான், பென்கூலன் பள்ளிவாசல் பொருளாளராகவும், மௌலானா முஹம்மது அலி பள்ளிவாசலின் துணைச் செயலாளராகவும், பணிபுரிந்துள்ளார்.

சிங்கப்பூரின் தமிழ் முஸ்லிம் அமைப்புகள் யாவும் ஒரு குடையின் கீழ் செயல்பட்டால் நிறைய அனுகூலங்கள் உண்டு என்பதை அறிந்து இவர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹாஜி எம்.கே.ஏ.ஜப்பார், மு.அ.மசூது, கே.ஓ.அலாவுதீன் ஆகியோருடன் இணைந்து இந்திய முஸ்லிம் பேரவையை உருவாக்கினார். பேரவையின் சட்ட திட்டங்களை உருவாக்கியதில் இவருக்கும் பங்கு இருந்தது.

முதியோர்களின் எண்ணிக்கை பெருகி வருவது கண்ட ஹாஜி இபுறாஹிம் மரைக்கான், குடியிருப்புப் பகுதிகளின் கீழ்த்தளத்தை அவர்கள் பயன்படுத்த, பொழுதை மகிழ்ச்சியாகக் கழிக்க அரசாங்கத்திடம் பரிந்துரை வழங்கினார். உட்லண்ஸ் வட்டாரத்தில் எழுப்பப்பட்ட முதியோர் இல்லத்தின் மேம்பாட்டுப் பணிகளை முன்னின்று செய்தார். சட்ட நுணுக்கங்களிலும், அணுகுமுறைகளிலும் கைவரப்பெற்ற இபுறாஹிம் மரைக்கான், தம்மிடம் உதவி கேட்டு வரும் அனைவருக்கும் ஆலோசனையும், உதவியும் செய்து வருகிறார்.

தாம் கொண்ட குறிக்கோளில் சற்றும் சலிப்படையாமல் இளைஞரைப்போல வலம் வந்து கொண்டிருக்கும் ஹாஜி இபுறாஹிமை நாம் உளமாரப் பாராட்டி வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# நோன்பு திறப்பு நிகழ்ச்சியில் பிரதமர் பாராட்டு

சிங்கப்பூர் முழுவதிலும் நோன்பு திறப்பு நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன. பிரதமர், துணைப் பிரதமர், அமைச்சர்கள், சமூக, சமயத் தலைவர்கள் சிறப்பு விருந்தினர்களாகக் கொண்டு நற்செய்திகளை வழங்கினர்.

சிங்கப்பூர் இந்திய முஸ்லிம் சமூக சேவைகள் கழகம் *12.8.2012* அன்று அங் மோ கியோவில் ஏற்பாடு செய்திருந்த நோன்பு திறப்பில் கலந்து கொண்ட பிரதமர் லீ சியென் லூங், சமய, சமூக நல்லிணக்கத்திற்கு எடுத்துக்காட்டு இந்த நிகழ்ச்சி என்று பாராட்டினார்.

பல இன, பல சமய சமூகங்கள் சகிப்புத் தன்மை, பரஸ்பர மரியாதை, ஒத்துழைப்பு ஆகிய பண்புகள் மூலம் ஒற்றுமையாக, நல்லிணக்கத்துடன் வாழ முடியும் என்பதைப் பிரதிபலிக்கும் நிகழ்ச்சி இது. பல கலாசார நிகழ்ச்சிகளையும் விழாக்களையும் சிங்கப்பூரர் கள் ஒருங்கிணைந்து கொண்டாடுவது வழக்கம். அது நமக்குரிய தனித்தன்மை. சிறப்பு அம்சம். இந்த நோன்பு திறப்பு நிகழ்ச்சியில் முஸ்லிம் அல்லாதவர்கள் பெருமளவில் கலந்து கொண்டிருப்பது அளவற்ற மகிழ்ச்சியைத் தருகிறது என்று அவர் குறிப்பிட்டார்.

சமூக நல்லிணக்கத்துடன் மேலும் சிறந்த சமுதாயத்தை நாம் வலுப்படுத்துவோம் என்றும் பிரதமர் தெரிவித்தார். கெபுன் பாரு சமூக






மன்றமும், அதன் மலாய் நடவடிக்கைகள் செயற்குழுவும் இந்த இனிய இஃப்தார் நிகழ்ச்சியில் பங்கேற்றன.

சிங்கப்பூர் இந்திய முஸ்லிம் சமூக சேவைகள் கழகம் *2004*ல் தோற்று விக்கப்பட்டது. ஆறு ஆண்டுகளுக்கு முன்பு முதல்முறையாக அங் மோ கியோ வட்டாரத்தில் நோன்பு திறப்பு நிகழ்ச்சியை நடத்தியபோது *600* பேர் கலந்து கொண்டனர். இம்முறை *3000* குடியிருப்பாளர்கள் கலந்து கொண்டது சிறப்புக்குரியது என்றார் கழகத்தின் தலைவர் ஷரீஃபா பீவி.

இந்நிகழ்ச்சியில் வசதி குறைந்த *25* குடும்பத்தினருக்கும் தனி நபர்களுக்கும் கழகத்தின் சார்பில் பிரதமர் உணவுப் பொருட்களையும் உதவித் தொகையையும் வழங்கினார்.

## இந்திய முஸ்லிம் பேரவை இஃப்தார்

இந்திய முஸ்லிம் பேரவை *3.8.2012* அன்று பென்கூலன் பள்ளிவாசல் அரங்கில் நோன்பு திறப்பு நிகழ்ச்சியை நடத்தியது. துணைப் பிரதமர் திரு. தியோ சீ ஹியன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். தேசிய தினப் பாடல் மற்றும் பற்றுறுதியுடன் இஃப்தார் நிகழ்ச்சி தொடங்கியது.

*16* சங்கங்கள் அங்கம் வகிக்கும் இந்திய முஸ்லிம் பேரவை சமய, சமூக நல்லிணக்க இலக்குடன் ஆண்டுதோறும் இஃப்தார் நிகழ்ச்சியை நடத்தி வருகிறது என்று அதன்

# அமைச்சர்களுக்கு திருக்குர்ஆன் அன்பளிப்பு

பென்கூலன் பள்ளிவாசல் அரங்கில் நடைபெற்ற இஃப்தார்-நோன்பு திறப்பு நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட சட்ட, வெளியுறவு அமைச்சர் திரு. சண்முகம் திருக்குர்ஆன் தமிழ் வசனங்களைக் கேட்டு வியந்தார். அவர் உரையாற்றியபோது தமிழில் குர்ஆன் கிடைத்தால் படித்தறியும் நல்வாய்ப்பு தமக்குக் கிடைக்கும் என்று கூறினார். பள்ளிவாசல் நிர்வாகிகள் அந்த நற்பணியைச் செய்தனர். டாக்டர் ஹிமானா சையது பள்ளிவாசல் அலுவலகத்திற்கு விரைந்து சென்று திருக்குர்ஆன் பிரதியை எடுத்து வந்தார். அமைச்சர் சண்முகம் பேசி முடித்தபோது திருக்குர்ஆன் மொழிபெயர்ப்புப் பிரதியை வழங்கினார் பென்கூலன் பள்ளிவாசல் நிர்வாகக் குழுவின் தலைவர் அல்ஹாஜ் எஸ்.எம். ஜலீல். அமைச்சருக்கு அளவற்ற மகிழ்ச்சி. நன்றி பாராட்டினார்.

டன்லப் வீதி அப்துல் கபூர் பள்ளிவாசலில் நடைபெற்ற இஃப்தார் நிகழ்ச்சியிலும் சிறப்பு விருந்தினருக்கு திருக்குர்ஆன் ஆங்கில, தமிழ் மொழிபெயர்ப்புப் பிரதிகள் வழங்கப்பட்டன. நிதியமைச்சரும், துணைப் பிரதமருமான தர்மன்சண்முக ரத்னத்திற்கு அவற்றை வழங்கினார் ஹாஜி எஸ்.எம். ஜலீல்.



---

தலைவர் ஹாஜி டாக்டர் கே.எம்.தீன் தமது வரவேற்புரையில் தெரிவித்தார்.

மஸ்ஜித் பென்கூலன் துணைத் தலைவர் ஹாஜி M.Y.முஹம்மது ரஃபீக் இஃப்தார் உரையாற்றினார். நோன்பு திறக்க தங்கள் பள்ளிவாசலுக்கு வருகையளிப்போரின் எண்ணிக்கை பல மடங்கு அதிகரித்துள்ளதை அவர் எடுத்துரைத்தார். அவரையடுத்து பள்ளிவாசல் இமாம் அப்துல் கையூம் அவர்களின் உரை இடம் பெற்றது.

திரு. தியோ சீ ஹியன் பென்கூலன் பள்ளிவாசல் வளாகத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு நோன்பாளிகளுடன் உணவு அருந்தினார்.

இந்நிகழ்ச்சியில் பல இன மக்களும், மூத்த தலைவர்களும் ஒன்றாக அமர்ந்து உண்டு மகிழ்ந்தது சிங்கப்பூரின் இன, சமய, நல்லிணக்கத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்ததாக இந்திய முஸ்லிம் பேரவை மனநிறைவு தெரிவித்தது.

## தோப்புத்துறை சங்க இஃப்தார்

தோப்புத்துறை முஸ்லிம் சங்கமும் B.S. அப்துல் ரஹ்மான் பல்கலைக் கழக முன்னாள் மாணவர் சங்க சிங்கப்பூர் கிளையும் இஃப்தார் நிகழ்ச்சியை இணைந்து நடத்தின.

துணைப் பிரதமர் தர்மன் சண்முகரத்தினம், சிங்கப்பூர் இந்திய முஸ்லிம் சமூகத்தின் முன்னேற்றத்தை வெகுவாகப் பாராட்டினார். அதிக ஒற்றுமையுடன் இச் சமூகம் திகழ்கிறது. இளைஞர்களின் பிரச்சினைகளைப் போக்க மெண்டாக்கி, சிண்டா ஆகிய சுய உதவி அமைப்புகளுடன் இணைந்து செயல்படுகிறது. சிறந்த தொழில் முனைவர்கள் பலரையும் இந்திய முஸ்லிம் சமூகம் கொண்டுள்ளது. இவர்கள் தங்கள் சமூகத்திலுள்ள வசதி குறைந்தவர்களுக்கு உதவ ஆர்வம் கொண்டுள்ளனர் என்று அவர் குறிப்பிட்டார்.

# ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கத்தின் பணிகளுக்குப் பாராட்டு




திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் சிங்கப்பூர் கிளை, 4-8-2012 அன்று பென்கூலன் பள்ளிவாசலில் நோன்பு திறப்பு நிகழ்ச்சியை நடத்தியது. சிங்கப்பூரின் ஒற்றுமை, இன, மற்றும் சமய நல்லிணக்கத்தைப் பறைசாற்றிய இந்நிகழ்ச்சியில், சிறப்பு விருந்தினராக சிங்கப்பூரின் சட்ட, வெளியுறவு அமைச்சர் கா. சண்முகம் கலந்து கொண்டார். இச்சங்கத்தின் கல்விப் பணிகளைப் பாராட்டி பேசியதுடன், கல்விதான் முன்னேற்றத்திற்கு சிறந்த வழி என்றும், ஒன்றுபட்ட சமூகமாகத் திகழ்வது அவசியம் என்றும் அவர் எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியில் முக்கிய விருந்தினர்களாக நீ சூன் குழுத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரும், சுகாதார மற்றும் போக்குவரத்து அமைச்சுக்கான நாடாளுமன்றச் செயலாளருமான இணைப் பேராசிரியர் டாக்டர் முஹம்மது பைசல் இப்ராஹிம், பென்கூலன் பள்ளிவாசல் தலைவர் ஹாஜி முஹம்மது அப்துல் ஜலீல், துணைத் தலைவர் ஹாஜி முஹம்மது ரஃபீக், டாக்டர் ஹிமானா சையத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக கல்விப்பணிகளை ஆற்றிவரும் இச்சங்கம், சிங்கப்பூரின் சிறைக் கைதிகளுக்கு நல்லுபதேசம் வழங்கும் சேவையில் ஈடுபடவிருப்பதாக அறிவித்தார், சங்கத்தின் தலைவர் முஹிய்யத்தீன் அப்துல் காதர். ஹமீது கௌஸ் கிராஅத் ஓத, நிகழ்ச்சியை வழிநடத்தினார் அமானுல்லாஹ். மௌலவி கலீல் அஹ்மது ஹசனி ரமலானின் சிறப்பைப் பற்றிப் பேசினார். சிறப்பு விருந்தினர்களுக்கு தலைவர் அப்துல் காதரும், செயலாளர் அப்துல் சுபஹானும் பொன்னாடைப் போர்த்தி நினைவுப் பரிசுகள் வழங்கினர். ஜமால் முஹம்மது கல்லூரியின் முன்னாள் மாணவர்களும், சமூகத் தலைவர்களும் கலந்துகொண்ட இந்நிகழ்வு, சிங்கப்பூரின் தேசிய தின வாழ்த்துக்களைக், கூறி, இனிதே நிறைவுற்றது.

## மகாகவி அல்லாமா இக்பால் அறிவுரை

‘மானிடனே! நீ உன் கடமையை மறக்காதே இறைவனுக்கு அடிபணிவதுதான் உன் கடமை. அடிபணிவதில்தான் மனிதனின் மகிமை இருக்கிறது. நீ உன்னை இறைமறையின் கைதியாக்கிக் கொள். மொட்டுக்குள் காற்று அடைபடும்போது வாசனை கிடைக்கிறது. சங்கம சட்டத்துக்குள் கட்டுப்படும்போது நீர்த்துளி சமுத்திரமாகிறது. சட்ட அடிப்படையில்தான் சகலமும் இயங்குகின்றன. சட்டத்தின் கடுமைகளைச் சிந்திக்காதே முஹம்மதின் வழிமொழிகளை மீறி நடக்காதே.’

# PHOTO NEWS

# படச் செய்திகள்




Ministers' Hari Raya get together, Fairmont Singapore, 31 Aug 2012



DPM Teo Chee Hean at Hari Raya get together, Fairmont Singapore, 31 Aug 2012



Minister for Information, Communication and the Arts and Minister in charge of Muslim Affairs, Dr. Yaacob Ibrahim's visit to Al-Ansar mosque's temporary site, 4 Sep 2012



Minister Dr. Yaacob Ibrahim chatting with Asatizahs at Al-Ansar mosque's temporary site, 4 Sep 2012



Mufti Dr. Mohamed Fatris Bakaram, leading Eidul Fitr prayers at Darul Aman mosque, 19 Aug 2012



Congregation at Darul Aman mosque for Eidul Fitr prayers, 19 Aug 2012




Ramadhan disbursements by President of MUIS, Haji Mohd Alami Musa, Ar Raudhah mosque, 12 Aug 2012



Interfaith Iftar, Harmony Centre, 3 Aug 2012

# இந்திய முஸ்லிம் பேரவையின் செயல் திட்டங்கள் தலைவர் ஃபரியுல்லாஹ் விளக்கம்



இந்திய முஸ்லிம் பேரவை (FIM) சிங்கப்பூரிலுள்ள இந்திய முஸ்லிம் சங்கங்களை ஒருங்கிணைக்கும் அமைப்பாக 1993ல் உருவாக்கப்பட்டது. பன்மையில் ஒருமை காணும் பாங்குடன், ஒட்டுமொத்த சிங்கப்பூர் ஐக்கியத்திற்கு பங்களிக்கும் கடப்பாட்டுடன் பேரவை தொடங்கப்பட்டது.

ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கத்தின் (UIMA) தலைவர் ஃபரியுல்லாஹ் இந்திய முஸ்லிம் பேரவையின் தலைவராக 15.9.2012 அன்று தேர்ந்தெடுக்கப்பட்டார். தமக்கு வழங்கப்பட்டுள்ள இந்த தலைமைத்துவச் சிறப்பும் பொறுப்பும் மகிழ்ச்சியையும் மனநிறைவையும் தருவதாக அவர் தெரிவித்தார். இந்திய முஸ்லிம் பேரவையின் தலைவர் எனும் முறையில், சங்கம் மற்றும் சமூக மேம்பாட்டுக்கு சிறந்த பங்கும் பணியும் ஆற்ற ஜனாப் ஃபரியுல்லாஹ் உறுதி தெரிவித்துள்ளார்.

சமூகத்திற்குச் சிறப்பாகப் பங்காற்றுவதற்காக இந்திய முஸ்லிம் பேரவை சுய உதவிச் சேவைகளை மேம்படுத்த விரும்புகிறது. மற்ற சுய உதவிக் குழுக்களுடன் இணைந்து செயலாற்றுவது இலக்கு. அதன் மூலம் நமது சமூகத்துக்கு சிறந்த உதவிகளையும், விரிவான சேவைகளையும் இந்திய முஸ்லிம் பேரவை வழங்கும் என்று அவர் உறுதி தெரிவித்தார்.

அடுத்து, இந்திய முஸ்லிம் பேரவை தொய்வில்லாமல் தொடர்ந்து சேவை வழங்குவதற்கு வசதியாக, சொந்த அலுவலகம் அல்லது வளாகத்தைப் பெற விரும்புவதாக அவர் குறிப்பிட்டார். இந்திய முஸ்லிம் பேரவையின் சேவைகளை மேம்படுத்துவதற்கு அது உதவும். செயலக வசதிகளைப் பொறுத்து சட்ட வசதிகளையும், சமூக ஆலோசனைச் சேவைகளையும் பேரவை வழங்கும்.

நமது சொந்த உள்ளூர் சமயக் கல்வி ஆசிரியர்களைப் (Azatizah) பெறும் முயிஸின் திட்டத்திற்கு பேரவை ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்கும். நமது சமுதாயத் தேவைகளை ஈடு செய்வதற்கு, குறிப்பாக உள்ளூர் மதரஸாக்களின் வளர்ச்சிக்கு தமிழ் பேசும் மார்க்க ஆசிரியர்கள் அதிக அளவில் தேவைப்படுவதால் அதன் தொடர்பில் இந்திய முஸ்லிம் பேரவை ஆவன செய்யும்.

இந்திய முஸ்லிம் பேரவையின் இலக்குகள் இஸ்லாமிய சமய மன்றம், மெண்டாக்கி, சிண்டா ஆகியவற்றுக்கு இணையாகவும், இணைந்ததாகவும், நிர்வாக அணுகுமுறை சிறப்புடையதாகவும் இருக்கும் என்று ஜனாப் ஃபரியுல்லாஹ் தமது செயல் திட்டங்களை விளக்கினார்.

## ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்க சிறப்புக் கண்காட்சி

ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கத்தின் (UIMA) ஏற்பாட்டில் சமூக ஒருங்கிணைப்பு மற்றும் அவசரகால ஆயத்தநிலை விளக்கக் கண்காட்சி நடைபெற்றது.

சுல்தான் பள்ளிவாசல் இணை மண்டபத்தில் 1.7.2012 பிற்பகல் 2 மணிக்கு நிகழ்ச்சி தொடங்கியது. வெளியுறவு, சட்ட அமைச்சர் திரு.கா.சண்முகம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். ஏற்பாட்டுக் குழு ஒருங்கிணைப்பாளர் மு. ஜஹாங்கீர் தமது வரவேற்புரையில் இந்நிகழ்ச்சியின் இலக்கை விவரித்தார்.

அமைச்சர் சண்முகம் ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கத்தின் நற்பணிகளைப் பாராட்டினார். சமூக ஒருங்கிணைப்புக்கு உதவும் பயனுள்ள இத்தகைய நிகழ்ச்சிகளைச் சங்கம் தொடர்ந்து நடத்த வேண்டும் என்றும் அவர் பரிந்துரைத்தார்.

மாணவ-மாணவியர் பங்கேற்ற பல்சுவைப் படைப்புகள், அவர்களுக்குரிய பரிசளிப்பு, சிறப்பு பட்டிமன்றம் ஆகியவற்றுடன் கண்காட்சியும் சிறப்பாக இடம்பெற்றது.

# மஸ்ஜித் ஜாமியா சூலியா மதரஸா மாணவர் திறன் மேம்பாட்டு விழா

மஸ்ஜித் ஜாமியா (சூலியா) மதரஸா மாணவர்களை அணி திரட்டி 8.9.2012 அன்று சிறப்பான விழாவை நடத்தியது.

மஸ்ஜித் ஜாமியா (சூலியா), மஸ்ஜித் அல் அமீன், மஸ்ஜித் தாருஸ்ஸலாம், மஸ்ஜித் அப்துல் கஃபூர், மஸ்ஜித் பென்கூலன், சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக், நூருல் இஸ்லாம் (சிங்கப்பூர் தென்காசி மூஸ்லிம் நலனபிவிருத்தி சங்கம்) ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கம் ஆகியவற்றின் மதரஸா மாணவர்கள் ஒருநாள் போட்டி நிகழ்ச்சிகளில் பங்கேற்றனர்.

சூலியா பள்ளிவாசல் நிர்வாகம் மாணவ மணிகளின் மார்க்கக் கல்வி, கலை, கைவினை, கற்பனைத் திறன்களை மேம்படுத்தும் நோக்கில் நம் சமூக அமைப்புகளுடன் இணைந்து, பல போட்டிகளை ஆண்டுதோறும் நடத்திவருகிறது.

கிராஅத் ஓதும் போட்டி, கேள்வி பதில் அங்கம், பேச்சுப் போட்டி, ஓவியம் வரையும் போட்டி முதலான நிகழ்ச்சிகளில் அவர்கள் உற்சாகமாகக் கலந்து கொண்டு அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தினர்.

தலைமை முஃப்தி டாக்டர் ஃபத்ரிஸ் பக்ரம் இந்நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். போட்டிகளில் கலந்து கொண்ட மாணவ, மாணவியருக்கு நல்வாழ்த்துகளை வழங்கிவிட்டு சுருக்கமான நல்லுரையை நிகழ்த்தினார். ரமலான் நோன்பின் சிறப்புகளை உணர்த்திய அவர், முஸ்லிம்கள் அனைவரும் மூமின்களாக,






இறைவிசுவாசிகளாகத் திகழ வேண்டும் என்று எடுத்துரைத்தார்.

“மாணவ மணிகள் அனைவரும் அண்ணல் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் வழியைப் பின்பற்றி முன்னேற வேண்டும். அவர்களின் ஹதீஸைப் படித்து அறிந்து கொள்ள வேண்டும். போட்டித் திறனுடன் முன்னேற வேண்டும். அது மற்றவர்களுடன் போட்டியிடுவது அல்ல. நமக்குள் நாமே திறனை வளர்த்துக் கொண்டு தன்னம்பிக்கையுடன் முன்னேற வேண்டும்” என்று பரிந்துரைத்து, தலைமை முஃப்தி வெற்றி பெற்ற மாணவ, மாணவியருக்கு பரிசுகளை வழங்கினார்.

டாக்டர் ஃபத்ரிஸ் பக்ரம் அவர்களுக்கு மஸ்ஜித் ஜாமியா நிர்வாகக் குழுவின் தலைவர் எஸ். ஃபஹ்ருதீன் பொன்னாடை அணிவித்துச் சிறப்பித்தார்.

“நமது பிள்ளைகளே இஸ்லாமிய உலக அரங்கின் எதிர்காலத் தூண்கள். அதனால் அவர்கள் இஸ்லாமியக் கொள்கை, சட்டம், நீதி ஆகியவற்றைக் கற்கவும், திருக்குர்ஆனை ஓதி, மனனம் செய்யவும் வாய்ப்பு வசதிகளை வழங்குவது நமது தார்மீகக் கடமை. அந்த வாய்ப்பை மதரஸா மாணவ மாணவியர்களின் திறன் மேம்பாட்டுக்காகத் தொடர்ந்து வழங்குவோம்” என்று ஷேக் ஃபஹ்ருதீன் ‘நாடி’யிடம் தெரிவித்தார்.

# பாத்தாமில் சையது ஷாஹுல் ஹமீது பள்ளிவாசல் திறப்பு விழா



பாத்தாம் தீவில் சையது ஷாஹுல் ஹமீது பள்ளிவாசல் திறப்பு விழா சிறப்பாக நடைபெற்றது. சிங்கப்பூர் தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கத்தின் சுமார் 150 உறுப்பினர்களும், குடும்பத்தினரும், அச் சங்கத்தின் அல் மதரஸா நூருல் இஸ்லாம் மாணவர்கள் 30 பேரும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

பாத்தாம் மார்க்க அறிஞர் எச். ரூடி SE MM பள்ளிவாசலைத் திறந்து வைத்தார். இதற்கு முன் தொழுகை இடமாக மட்டுமே இருந்த இது 500 பேர் தொழக்கூடிய வசதியுடன் புதிய பள்ளிவாசலாகக் கட்டப்பட்டுள்ளது. மதரஸா வகுப்புகளை நடத்துவதற்கும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.




தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்க உறுப்பினர் ஹாஜி கே.எஸ். நைனா முஹம்மதுவும் அவருடைய குடும்பத்தினரும் காலஞ்சென்ற தந்தையார் பெயரில் மஸ்ஜித் சையது ஷாஹுல் ஹமீது பள்ளிவாசலைக் கட்டியுள்ளனர். கட்டுமானப் பணிக்கு உதவி நல்கிய அனைவருக்கும் ஹாஜி கே.எஸ். நைனா முஹம்மது நன்றி பாராட்டினார்.

இத்தகைய திட்டங்களை எதிர்காலத்திலும் நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்பும் உதவியும் வழங்க விரும்புவதாக தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கம் தெரிவித்தது.

---

## தென்காசி முஸ்லிம் சங்க குடும்ப தின விழா

தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்திச் சங்கம் நோன்புப் பெருநாள் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக குதூகல குடும்ப தின விழாவை 2.9.2012 அன்று நடத்தியது.

லெங் கீ வசிப்போர் மன்ற ஆதரவுடன் வாட்டர் ஃபால்ஸ் மாணவர் பராமரிப்பு நிலைய வளாகத்தில் நடைபெற்ற விழாவில் தஞ்சோங் பகார் குழுத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் இந்திராணி ராஜா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இவ்விழாவில் வசதி குறைந்த 100 குடும்பங்களுக்கு உணவுப் பொருட்கள் வினியோகிக்கப் பட்டன.



இந்த நிகழ்ச்சியை முறையாக ஏற்பாடு செய்து நடத்திய தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்திச் சங்கத்திற்கு சிறப்பு விருந்தினர் தமது மகிழ்ச்சியையும், பாராட்டுகளையும் தெரிவித்தார்.

# "லீ குவான் இயூ முழுமை உன்னத தேசிய விருது" பெற்ற இந்திய முஸ்லிம் மாணவர் முஹம்மது இல்முத்தீன்

சிங்கப்பூர் கல்வி அமைச்சின் சிறப்பு விருதுகள் வழங்கும் நிகழ்ச்சி *16-8-2012* அன்று SEAMEO Regional Language Centre (Auditorium) அரங்கத்தில் நடைபெற்றது. கல்விக்கான மூத்த துணையமைச்சர் திரு. லாரன்ஸ் வோங் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

பாசிர் ரிஸ் உயர்நிலைப் பள்ளியில் சாதாரண நிலை (GCE 'O' Level) பயின்று வரும் இந்திய முஸ்லிம் மாணவர் முஹம்மது இல்முத்தீன் பெற்ற வெற்றிகளையும் கல்விச் சாதனைகளையும் பாராட்டி, அவருக்கு மூத்த துணையமைச்சர் திரு. லாரன்ஸ் வோங், "லீ குவான் இயூ முழுமை உன்னத விருது" (The Lee Kuan Yew Award For All-Round Excellence) வழங்கினார். கல்வியில் மட்டுமின்றி, சமூக சேவையின் கடப்பாட்டிலும், தலைமைத்துவ தகுதிகளிலும், சீரிய நற்பண்புகளிலும் முழுமையான உன்னத நிலை அடைந்த மாணவர்களுக்கு உயர்நிலைப் பள்ளி பருவத்தின் இறுதி ஆண்டில் இந்த தேசிய விருது வழங்கப்படுகிறது.

"அயராத முயற்சியும், கடின உழைப்பும், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களின் வழிகாட்டுதலும்தான் இந்த உன்னத தேசிய விருது பெறுவதற்கு காரணம்" என்றார் தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட மாணவர் முஹம்மது இல்முத்தீன்.

இவர் ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் சிங்கப்பூர் கிளையின் தலைவர் முஹிய்யத்தீன் அப்துல் காதரின் புதல்வர்.

"என் தந்தையிடமும், அன்னையிடமும் நான் கற்றுக்கொண்ட நற்பண்புகள் எனது பலம். என் பெற்றோர்களே என் முதல் ஆசான். திறமைகளை நான் வளர்த்துக் கொள்வதற்கும் என் ஆசிரியர்கள் பெரும் பங்கு ஆற்றி இருக்கிறார்கள்."



"நான் பயின்று வரும் பாசிர் ரிஸ் உயர்நிலைப் பள்ளியில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, இந்த விருது பற்றிய தகவல்கள் என் கவனத்திற்கு வந்தன. அன்றுமுதல், இந்த உயரிய தேசிய விருதைப் பெற வேண்டும் என்பது என் பெரிய கனவாக இருந்தது. இந்த விருதைப் பெறுவது போல அடிக்கடி கற்பனை செய்து பார்ப்பேன். இது ஒருநாள் முயற்சி அல்ல; விடாமுயற்சியும், மனம் தளராமையும், கடின உழைப்பும், என் திறமைகளின் மீது நான் கொண்ட நம்பிக்கையாலும், இந்த முழுமை உன்னத விருது இறைவன் அருளால் கிடைத்ததாக நான் நம்புகிறேன். எல்லாப் புகழும் இறைவனுக்கே!"

"இந்த உன்னத விருதைப் பெற்றபோது, முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார் என்பது புரிந்தது. என் தன்னம்பிக்கை மேலும் வளர்ந்தது. இந்த விருது என் வெற்றிப் பயணத்தின் ஆரம்பம் என்றும், இனிமேல்தான் நிறைய சாதிக்க வேண்டுமென்றும் என் மனதுக்குள் நினைத்துக் கொண்டேன்," என்கிறார் மாணவர் இல்முத்தீன்.

# மரபுடைமை நிலையம் நாகூர் தர்காவில் சிங்கை நேசன் - 125 நினைவுப் படிவம்

சிங்கப்பூரில் தமிழ் இதழைத் தொடங்கிய முன்னோடி சி.கு.மகுதூம் சாயபு என்பதை நாடறியும். 27.6.1887ல் சிங்கை நேசனை அவர் தொடங்கினார். சிங்கை நேசன் 125 ஆண்டு வரலாற்று நினைவாக, இந்திய முஸ்லிம் மரபுடைமை நிலையம் நாகூர் தர்காவில், முதல் சிங்கை நேசன் இதழின் படிவம் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கிறது. ஹாஜி மு. இலியாஸ் 27.6.2012 அன்று அந்தப் படிவத்தை மரபுடைமை நிலைய நிர்வாகக் குழுவினரிடம் வழங்கினார். சமுதாய நல்லிணக்க, தார்மீக, அர்ப்பணிப்பு உணர்வுகளை ஆசிரியர் மகுதூம் சாயபு தமது இதழில் ஆவணப்படுத்தியுள்ளார்.

சி.கு.மகுதூம் சாயபு, 1882ஆம் ஆண்டில் தமது தீனோதயவேந்திர அச்சகத்திலிருந்து திங்கட்கிழமை தோறும் ஞான சூரியனை வெளியிட்டு வந்தார். அதையடுத்து அவர் வெளியிட்ட சிங்கை நேசன் பல்சுவை இதழ்.

பல இன, பல மொழி நாடு என்பதால் முதல் பக்கத்திலேயே தமிழிலும், ஆங்கிலத்திலும் சமர்ப்பணம். பத்திரிகையின் நோக்கம் பற்றிய விளக்கம். இரண்டாம் பத்தியில் கடவுள் வாழ்த்து. எக்காரியத்தைத் தொடங்கினும் அக்காரியம் இடையூறின்றி இனிது முடியும் பொருட்டு கடவுளை வாழ்த்துவது மரபாகலின் யாமும் கடவுளை வாழ்த்தி இப்பத்திரிகையை ஆரம்பம் பண்ணுதல் முறைமையாகும் என்ற பீடிகையுடன் அவர் எழுதியுள்ள கருத்து இனிய சிந்தனை.

“கடவுளை நாம் வாழ்த்தும் பொழுது சகல சராசரங்களையும் படைத்தும் காத்து அழித்து வரும் ஒரு ஆதி காரண வஸ்து இருக்கும் என்பதைக் குர்ஆன் முதலிய வேதங்களினாலும் பெரியோர் வாக்கியங்களினாலும் எங்கள் மனசாட்சியினாலும் அறிந்திருக்கிறோம்.

“உலகத்திலே நாஸ்திகர்களாகிய சந்தேகவாதிகள் சிலரேயன்றி மற்றையோர் யாவரும் கடவுள் ஒருவர் இருக்கிறாரென்று திரிகரணங்களாகிய மனம் வாக்கு காயங் களினாலே தியானித்து வாழ்த்தி வணங்கி வருகிறார்கள்.”

“இப்பத்திரிகை நெடுங்காலம் நீடிக்கவும் இதனை வாசிப்போர் அறிவிலே தேறி மகிழ்ச்சியடையவும் யாம் பிரயோசனமடையவும் இக்கடவுள் கிருபை செய்வாராக.”



“எழுதி வரும் காரியங்கள் எவர்களையும் பிரியப்படுத்தவும் எழுப்பிவிடவும், முயற்சி பண்ணவும் சோம்பலினின்று விழிக்கவும் செய்யவும் கூடியளவு பிரயாசப்படுவோம். வாசிப்பவர்கள் அருவருத்து வெறுக்கத்தக்க காரியங்களை நீக்கி விடுவோம்.”

சந்தைப் பொருட்களின் விலை, புடவை விலை, பேங்க் நாணய மாற்று விகிதம், விளம்பரக் கட்டணம். வாசகர்கள் கடிதம் எழுதும் முறை, சிங்கப்பூர் நடப்புகள், தலையங்கம் முதலான பகுதிகள் இதழை அலங்கரிக்கின்றன.

“ஊர் நன்மைக்காகவே யாம் இதை ஆரம்பித்திருப்பதால் நீங்களனைவரும் இந்த நோக்கத்துடனே செய்ய வேண்டிய ஒழுங்கு களையும் தங்கள் அபிப்பிராயங்களையும் இடைக்கிடை எழுதியனுப்புவீர்களாக.”

பத்திரிகையாளர் மகுதூம் சாயபு 125 ஆண்டுகளுக்கு முன் எழுதிய வாசகங்கள் அவருடைய தனி முத்திரைகள். அன்றைய மலாயா, ஜாவா, மேடான், பர்மா ஆகியவற்றிலும் சிங்கை நேசன் வாசகர்களைப் பெற்றிருந்தது. 1891 ஜூன் 23ஆம் தேதி இதழுடன் மூன்று ஆண்டுகள் தொடர்ந்து வெளிவந்தது சிங்கை நேசன்.

மகுதூம் சாயபு தீனோதயவேந்திர அச்சகத்தை நடத்தி சிங்கை நேசனை நடத்தியதுடன் அக்கால இலக்கியவாதிகளின் நூல்கள் பலவற்றை அச்சிட்டு வெளியிட்ட வரலாறு மற்றொரு சாதனை அத்தியாயம்.

-ஜே.எம்.எஸ்.